**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 3, October 2023** **E-ISSN: 2583-0481**

# Agricultural Records in *Ainkurunooru*

**K. Monisha,** Reg. No.: 21113154022029, Research Scholar, Tamil Research Centre,
S. T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6768-3876**
**Dr. R. Sorna Bamila,** Assistant Professor of Tamil, Tamil Research Centre,
S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.8397771**

## Abstract

*Among the earliest literature of Tamil are the Sangam literature "Ettuthogai" and "Pathupattu". Sangam people observed nature very closely. The farmers of the Sangam era had technical knowledge about land and water management. People of the Sangam age had sufficient knowledge in steps like how to handle them with nature. As water is necessary for a human to live, the people of the Sangam period cultivated different types of paddy and engaged in agriculture by setting up fields near the water bodies. They also grew other trees and crops like mango and sugarcane around the water bodies. Along with this, there are intercrops such as pepper, bitter gourd and small grains being cultivated in the village lands. One of the "Ainkurunooru" poems of the Sangam literature makes it clear that the people practised barter systems. Thus, the article studies on the agricultural practices.*

**Keywords:** *Aayinkurunooru*, Agriculture, Farmer, Crop.

## References

[1] Ramalekshmi, T. R. "Aayinkurunooru Velan Puzhangu Porutgal." *Shanlax Pannattu Tamizhiyal Aaivithal*, ISSN- 2454-3993, Volume – 2, Issue – 1, July -2017.
[2] Jeyapal, R. *Aganaanooru Moolamum Uraium*. NCBH, Chennai, 2007.
[3] Somasundaranar, P. V. *Silappathikaram*. Thirunelveli Thennindiya Saivasiththandha Noorpathipu Kazhagam. Thirunelveli – 6, 1968.
[4] Dhakshinamoorthy, A. *Aayinkurunooru Moolamum Uraium* Book -1. NCBH, 2011.
[5] Thirugnanasamtham, S. *Puraporul Venpa Malai*. Kathir Pathipagam, 2017.
[6] Nagarajan, V. *Kuruthogai Moolamum Uraium* Book -1. NCBH, 2011.
[7] Nagarajan, V. *Pathupattu Moolamum Uraium*. NCBH, Chennai – 600 098, 2011.
[8] Parameshwari, P. *Ainkurunootril Uriporul Mayakam*. *Puthiya Aavayam*, ISSN – 2456-821X, Volume – 7, Issue – 2, June 2023.
[9] Balasubramanian, K.V. *Puranaanooru Moolamum Uraium*. NCBH, 2007.
[10] Balasubramanian, K.V. *Natrinai Moolamum Uraium*. NCBH, 2007.
[11] Varatharasanar, M. *Thirukural Moolamum Uraium*. Thennindiya Saiva Sithantha Noorpathipu Kazhgam Limit, Chennai – 1993.
[12] Vaithiyalingam, C. *Tamil Panpattu Varalaru*. Ainthinai Pathipagam, Annamalai Palgalaikazhaga Veliyeedu, Chithambaram – 1, 2008.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# ஐங்குறுநூறு உணர்த்தும் வேளாண் சார் பதிவுகள்

**கி.மோனிஷா,** பதிவு எண்: 21113154022029, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-6768-3876
**முனைவர் இரா. சொர்ணபமிலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644
**DOI: 10.5281/zenodo.8397771**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழில் தோன்றிய மிகப் பழமையான இலக்கியங்களில் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் அடங்கும். இது சங்ககால மக்களின் வாழ்வியலையும், அவர்களது தேவைகளையும் படம்பிடித்து காட்டும் காலக்கண்ணாடியாகும். சங்க கால மக்கள் இயற்கையை மிகக்கூர்ந்து கவனித்திருக்கிறார்கள். மக்களின் தேவையை அறிந்து அதற்கேற்றவாறு பயிர் செய்திருக்கிறார்கள். நிலம், நீர் மேலாண்மை குறித்த தொழில் நுட்ப அறிவு சங்க கால விவசாயிகளுக்கு இருந்திருக்கிறது. விவசாயத்தை எவ்வாறு கையாள்வது போன்ற படிநிலைகளிலும் போதுமான அறிவை பெற்றவராக சங்ககால மக்கள் இருந்திருக்கின்றனர். ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு நீர் எவ்வளவு அவசியமோ அதே போன்று மனிதன் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு சத்துள்ள உணவு அவசியம். இதை அறிந்த சங்க கால மக்கள் பல்வேறு வகை நெல்லை பயிரிட்டனர், மேலும் நீர் துறைகளுக்கு அருகிலேயே வயல்களை அமைத்து வேளாண் தொழிலில் ஈடுபட்டனர். நீர்த்துறைகளைச் சுற்றி மா,கரும்பு போன்ற பிற பயிர்களையும் வளர்த்தனர். அதோடு ஊர் பொதுநிலங்களில் மிளகு, பாகற்காய், சிறுதானியங்கள், அவரை போன்ற ஊடுபயிர்களையும் பயிரிட்ட செய்தியும் அறியப்படுகிறது. சங்கஇலக்கியத்தில் ஒன்றான ஐங்குறுநூறு இச்செய்திகளை கூறுவதோடு பண்டமாற்று முறைகளை அம்மக்கள் கைக்கொண்டிருந்தனர் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இங்ஙனம் சிறந்த வேளாண் முறைக்காக பல்வேறு புழங்கு பொருட்களும் பயன்படுத்தப்பட்டன என்பன போன்ற செய்திகள் இக்கட்டுரையின் வாயிலாக அறியப்படுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *ஐங்குறுநூறு*, வேளாண்மை, உழவர், பயிர்.

**முன்னுரை**

தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகால பழமையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட மொழியாக திகழ்கின்றது. இலக்கியம் அக்கால மக்களின் வாழ்க்கையை படம் பிடித்து காட்டுவதாய் அமைந்துள்ளது.சங்க இலக்கியமானது எட்டு தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகையில் ஒன்றான ஐங்குறுநூறில், வயலும் வயலை சார்ந்த

நிலமுமான மருத நிலத்தில் வேளாண்மையே முக்கியத்தொழிலாகும். உலகின் தீய செயல்களுக்கு பசியும் வறுமையுமே மூல காரணம். ஆகவே ஒரு நாடு சிறந்தோங்க பசி, பிணி இல்லாது செய்ய வேண்டும் என்பதற்காக பல்வேறு வேளாண் சிந்தனைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. வேளாண்மை, மழைப்பொழிவு, உழவுத் தொழிலின் செயல்பாடுகள், நீர்த்துறைகள், பல்பயிர்சாகுபடி, பண்டமாற்றுமுறை, வேளாண்புழங்கு பொருட்கள் இவற்றின் மூலம் ஐங்குறுநூற்றின் வேளாண்மை செய்திகளை பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஐங்குறுநூற்றில் வேளாண்மை**

'வேளாண்மை' என்ற சொல் பொதுவாக கொடை, ஈகை ஆகியவற்றை குறிக்கும். நிலத்தின் கொடைத் தன்மையால் இப்பெயர் பெற்றது. ஆதி காலத்தில் மனிதன் வேட்டையாடி உண்ணுதலையே கைக்கொண்டிருந்தார். பின் அதனை தவிர்த்து தானே உணவை உற்பத்தி செய்ய ஆரம்பித்தபோது வேளாண்மை தோன்றியது. வேளாண்மை என்பதற்கு விவசாயம், உழவு, கமம் என்றும் பொருள்படும்.

> **எட்டுத்தொகை நூல்களில் மூன்றாவதாக வைக்கப்படும் நூல் ஐங்குறுநூறு. இது 3 முதல் 6அடி வரையிலான அடியளவு கொண்டது. திணைக்கு 100 பாடல்கள் வீதம் ஐந்து திணைக்கும் 500 பாடல்களை உள்ளடக்கியது. (பரமேஸ்வரி, ப. 2)**

புலத்துறை முற்றிய கூடலூர் கிழரால் தொகுக்கப்பட்டு, யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும் பொறையால் தொகுப்பிக்கப்பட்ட நூலாகும்.

> **இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது**
> **கைசெய்து ஊண் மாலை யவர் (குறள்-1035)**

என்ற குறள் வழி, கையால் தொழில் செய்தல் என்பது உழவுத் தொழிலையே குறிக்கும். உழவுத் தொழில் செய்பவர்கள் பிறரிடம் எந்த ஒரு பொருளையும் யாசிக்க மாட்டார்கள், தம்மிடம் யாசித்து வருபவர்களுக்கு உழவினால் வரும் பொருளையும் கொடுத்து உதவுவர் என்பதை அறியலாம்.

**மழைப்பொழிவு**

போதிய மழையும்,வளமான மண்ணும் வேளாண்மையின் உயிர் நாடி ஆகும். நிலையான விவசாயத்திற்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்று நீர், அந்நீரை தரவல்லது இயற்கையான மழைப் பொழிவேயாகும். உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது மழை வளமேயாகும். இத்தகைய மழையினால் பெரும் செல்வ செழிப்பும் உண்டாகும் என்பதை,
**மாரி வாய்க்க!வளம் நனி சிறக்க! (ஐங்., பா. 10: 2)** என்ற வரியும் மழையின் வரவைக் கண்டு மயிலானது ஆடல் புரிய, பெரிய தேனீகளானது ஆரவாரம் செய்கின்ற நிகழ்வினை,

> **மயில்கள் ஆல,பெருந் தேன் இமிர,**
> **தண் மழை தழீ இய மா மலை நாட! (ஐங்., பா. 292: 1-2)**

என்ற வரிகள் சிறப்பிக்கிறது.இதனை குறுந்தொகை

**மடவ மன்ற மஞ்ஞை மாயினம்**
**கால மாரி பெய்தென அதனெதிர்**
**ஆலலும் ஆலின (குறுந்., பா. 251)**

என்கிறது.

**உழவுத் தொழிலின் செயல்பாடுகள்**

"அகல உழுவதினும் ஆழ உழு" எனும் நாட்டு வழக்கிற்கு ஏற்பக் காளைமாடுகளினால் மிதித்து நிலத்தை மிகவும் சேறாக்கிக் கலப்பையால் உழுது, பிறகு உழுத நிலத்தை காலால் மட்டப்படுத்தி நாற்று நடுதல் என்பது முறையாகும். உழுதொழிலுக்கு காளை, எருது போன்ற உழுபகடுகளும், அதிகமான வருவாய் ஈட்டலுக்கு பசுக்களும் இன்றியமையாதனவைகளாகக் கருதப்பட்டதை, **பால் பல ஊறுக! பகடு பல சிறக்க (ஐங்., பா. 3: 2)** என்ற ஐங்குறுநூறு பாடல் வரி மூலம் அறியமுடிகிறது. புறநானூறும்,

**பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற**
**திருந்தா மூரி (புறம்., பா. 391)**

என்று சான்று பகர்கிறது.

மருதநிலமக்கள் தம் வயலில் விதை விதைத்த பொழுதில் மழை மிகுதியாகிறது. இக்காரணத்தால் விதைகள் அழுகுவதற்கோ அல்லது அரித்து செல்வதற்கோ வாய்ப்புள்ளது என்று வருந்திய நேரத்தில் வயலில் வாழும் நண்டுகள் வெண்ணிற நெல்லின் கதிரை அறுத்து செல்வதும் உழவருக்கு மிகுந்த துன்பத்தை அளித்தது என்பதை,

**மாரி கடி கொள, காவலர் கடுக,**
**வித்திய வெண் முளை களவன் அறுக்கும் (ஐங்., பா. 29: 1, 2)**

எனவும் மலை போல் உயர்ந்த வெண்மை நிறமுடைய நெற்போர்கள் கொண்டது மருத நிலம். என்பதை, **விண்டு அன்ன வெண்ணெற் போர்வின் (ஐங்., பா. 58: 1)** என்ற வரிகளும் தெளிவிக்கிறது. களத்து மேட்டில் நெற்கதிர்களை போரடித்து நெல்மணிகளை பிரித்தெடுக்கும் போது அதில் நெல்மணிகளின் அளவானது நெற்போரை விட அதிகம் இருக்கும். இவை காண்பதற்கு மலை போல் காட்சியளிக்கும். இதை கீழ்காணும் வரிகள் கூறுகிறது.

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**
**பழனப் பல்புள் இரியக் கழனி (நற்., பா. 350)**

வயலில் முன்பு விதை விதைத்த உழவர் அது நன்கு விளைந்த பின் பலமடங்கு விளைச்சலோடு வீடு திரும்ப வேண்டும் என நினைப்பர். ஒன்று நூறாக விளைய வேண்டும் என்ற எண்ணத்தில் திரும்புகையில், முந்தைய போகத்து விளைச்சலை வீட்டிற்குக் கொண்டு செல்வர். இதன் வாயிலாக நடுதலும், அறுவடை செய்தலும் அடுத்தடுத்த வயல்வெளிகளில் நிகழ்வது அறியப்படுகிறது. இதை,

**வித்திய உழவர் நெல்லோடு பெயரும்**
**பூக் கஞல் ஊரான் தன் மனை**

**வாழ்க்கை பொலிக! (ஐங்., பா. 3: 3, 5)**

**புன் புல மயக்கத்து விளைந்தன தினையே! (ஐங்., பா. 260: 4)**

என்ற ஐங்குறுநூற்று பாடல்களின் வழி அறியலாம்.

வயலில் அறுவடை செய்யும் உழவர்களுக்கு களைப்புத் தோன்றாமல் இருக்க பறை என்ற பண்பாட்டு இசைக்கருவியானது கொட்டப்பட்டது என்பதை, **அரி பறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும் (ஐங்., பா. 81: 2)** என்ற ஐங்குறுநூறும்

**கழிசுற்றிய விளை கடனி**

**அரிப் பறையால் புள் ஓப்புந்து (புறம்., பா. 396)**

என்று புறநானூறும் பறை என்ற இசைக்கருவியை சிறப்பித்து கூறுகிறது.நிலத்தை உழுதல்,விதை விதைத்தல், காவல் செய்தல், அறுவடை செய்தல்,போரடித்தல், காற்றிலே தூற்றி நெல்மணிகளை எடுத்தல் முதலிய உழவுத் தொழிலின் செயற்பாடுகளை,

**தண்பணை வயலுழவனைத்**

**தெண்கிணைவன் திருந்து புகழ் கிளந்தன்று (புற. வெ. மாலை, பா. 186)**

என்ற *புறப்பொருள் வெண்பாமாலை* இலக்கண நூலும்,

**அரிந்துகால் குவிந்தோர் அரிகடா வுறுத்த**

**பெருஞ்செந் நெல்லின் முகவைப் பாட்டும்**

**தெண்கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த**

**மண்கணை முழவின் மகிழிசை யோதையும் (சிலப்., பா. 1369)**

என்ற சிலப்பதிகாரமும் சான்றாகிறது.

**நீர் துறைகள்**

ஐம்பூதங்களின் ஒன்றான நீரினை ஒரு குறிப்பிட்ட பகுதியில் பெருக்கி பாதுகாப்பது நீர்த்துறைகள் ஆகும். இவை வேளாண் நிலங்களுக்கு அருகிலேயே பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றின் அருகில் வடுக்களை உடைய மாமரமானது வளமான தளிர்களைக் கொண்டும் அமைந்துள்ளதால், அவை இளவேனில் காலத்தையும் சுட்டுவதாக அமைகிறது. இதையே, **மாவும் வண்தளிர் ஈன்றன (அகம்., பா. 355)** என்ற அகநானூற்று பாடல் வரியும் கூறுகிறது. நன்கு முற்றிய மாம்பழங்களானது நெடிய நீர் நிறைந்த பொய்கையில் 'துடும்' என்னும் ஒலியுடன் விழும் தன்மையை அறியலாம்.

பொய்கையில் உள்ள வாளை மீன்கள் மாமரத்திலிருந்து விழும் பழங்களை உண்டன என்பதை குறுந்தொகையும் சுட்டும்.

**கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்**

**பழன வாளை கதூஉம் ஊரன் (குறுந்., பா. 8: 1, 2)**

**பல்பயிர் சாகுபடி**

ஒரே பகுதியில் ஒரே நேரத்தில் பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும் முறை பல்பயிர் சாகுபடி எனப்படும்.சங்ககாலத்திலும் பல்பயிர் சாகுபடி மருத நிலத்தில் இருந்துள்ளது. ஊர்

பொது நிலத்தில் வளர்ந்த பாகற்கொடியில் முயிறுகள் (ஒருவகை எறும்பு) கூடு கட்டி இருக்கும், பழனமும்,நெல் வயலும் அடுத்தடுத்து இருந்தமையால் பழனத்தில் அமைந்த பாகல் வயலில் இருந்த நெற்பயிர் மீதும் படர்ந்திருந்தது என்பதை,

**பயனப் பாகல் முயிறு மூசு குடம்பை**

**கழனி எருமை, கதிரோடு மயக்கும் (ஐங்., 99: 1, 2)**

எனும் பாடல் அடியால் அறியலாம். மலையில் தினைப்புனத்துடன் மிளகு கொடியும் சேர்த்து பயிரிட்ட தகவலும் குறிப்பிடப்படுகிறது.சிறிய தினை தானியங்களை கொண்ட கதிர்களை குறிஞ்சி நில குறவர்கள் அறுவடை செய்த பின்னர் கதிர்களின்றி நின்ற வெள்ளிய தட்டைகளின் மேல் படர்ந்து காய்ந்த அவரையின் மேற் புறத்தில் கிளைகள் வந்து படிகின்றன, என்பதை,

**சிறுதினை கொய்த இருவி வெண் கால்**

**காய்த்த அவரைப் படு கிளி கடியும் (ஐங்., பா. 286: 1, 2)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகிறது.இங்கு சுட்டப்பட்ட அவரையானது ஊடுபயிராக வளர்த்தமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சங்ககால மக்கள் ஊடுபயிர்களையும் பயிரிட்டனர் என்பதும் புலப்படுகிறது. **குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை (மலைபடு., பா. 110)** இதற்கு மலைபடுகடாம் வரிகளும் சான்றாகின்றன.

**பண்டமாற்று முறை**

பண்டமாற்று என்பது ஒரு பொருளுக்காக மற்றொரு பொருளை பரிமாற்றி கொள்ளுதல் ஆகும். இது பழங்காலந் தொட்டே நடைமுறையில் உள்ள செலாவணியாகும்.

**முள் எயிற்று பாண்மகள் இன் கெடிறு சொரிந்த**

**அகன் பெரு வட்டி நிறை,மனையோள்**

**அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர! (ஐங்., பா. 47.1-3)**

என்ற வரிகள் வழி,கெடிற்று மீன் நிரப்பப்பட்ட அகன்ற பெரிய வட்டியானது நிறையும்படி அறுவடை செய்த நெல் வயலில் விளைந்த பெரும் பயிறை நிரப்புவர் என்பதை அறியலாம். இதில் ஒருவட்டி மீனுக்கு ஒருவட்டி பயிறு பண்டமாற்றாக கொடுத்தளிக்கதக்கது.மற்றொரு பாடலானது பாணன் இளமகள், வரால்மீனைக் கொண்டு வந்த வட்டியில் உழவர் மனைக் கிழத்தி முந்தைய ஆண்டு விளைந்த பழைய வெண்ணெல்லை நிரப்பிக் கொடுப்பாள்,

**வராஅல் சொரிந்த வட்டியுள், மழையோள்**

**யாண்டுகழி வெண்ணெய் நிறைக்கும் (ஐங்., பா. 48.2, 3)**

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூறும்,

**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு**

**அவ்வாங்கு உந்தி அஞ்சோற் பாண் மகள்**

**… பழஞ் செந்நெல்லின் முகவை கொள்ளாள். (அகம்., பா. 126)**

என பாண்மகள் விற்கும் வாளை மீனுக்கு மாற்றாக அவள் நெல்லை பெறுவதில்லை, கழங்கு போன்று பெரிய முத்துக்களையும், அணிகலன்களையும் பெற்றால் என்பதை உணர்த்துகிறது.

**வேளாண் புழங்கு பொருட்கள்**

மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற பொருட்கள் புழங்கு பொருட்கள் ஆகும். **ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு சமூகத்தினர் தம் வாழ்வுக்காகப் பயன்படுத்தி வந்த பொருட்களை புழங்கு பொருட்கள் (இராமலெட்மி, ப - 2)** புழங்குதல் என்பதற்கு 'கையாளுதல், பழகுதல்' என திருமகள் தமிழகராதி பொருளுரைக்கிறது. தட்டை என்னும் கருவியானது தினைப் புனங்களில் கிளியை விரட்ட உதவுவதாகும்.விளைந்திருக்கும் தினைப்பயிரைக் கவர வரும் மயில், கிளி போன்ற பறவைகளை விரட்ட இக்கருவியை தட்டி ஒலி எழுப்புவர். ஐங்குறுநூற்றிலும், **... தட்டையின்** / **ஐவனச் சிறு கிளி கடியும் நாட! (ஐங்., பா. 285: 1, 2)** என்ற அடிகளில் தங்களுடைய தினைப்புனத்தில் தினையைக் கொத்த வரும் சிறுகிளிகளை விரட்டுவதற்காக தட்டையைக் கொண்டு ஒலி எழுப்பி விரட்டினாள் என்ற செய்தி பெறப்படுகிறது. இக்கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக, **தழலை வாங்கியும் தட்டை ஓச்சியும்** / **அழலேர் செயலை அந்தழை அசைஇயம் (அகம்., பா. 188)** என்ற அகநானூற்று பாடல் வரி அமைகிறது. ஆயர் பெண்கள் இனிய மாங்கனியை உதிர்க்க அரிய பொருளான கரும்பை வெறும் தடி போல் பயன்படுத்தினர் என்பதை அறியலாம்.

**கரும்பு குனிலா மாங்கனி உதிர்க்கும் (ஐங்., பா. 87: 2)**

**கல் முகை வயப்புலி கழங்கு மெய்ப் படுஉ**
**புன் புலம் வித்திய புலவர் புணர்த்த**
**மெய்மை அன்ன பெண்பாற் (ஐங்., பா. 246: 2 - 4)**

ஐங்குறுநூற்றில் குறிஞ்சி நிலத்தில் குறவர்கள் விதைத்துள்ள தினைப் பயிரைக் கவர வரும் விலங்குகளிடமிருந்து பாதுகாக்க, கழற்சிக்காயை கண்களாகப் பொருத்தி பெண் புலியின் உருவத்தை செய்து தங்கள் விளைநிலங்களில் நிறுத்தி வைத்து பயிரினை காத்த செய்தினை ஐங்குறுநூறு வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

எட்டுத்தொகையில் ஒன்றான *ஐங்குறுநூறு* ஐந்துநிலங்களையும், அவற்றின் வேளாண்மையையும் வருணிக்கிறது. வேளாண் தொழில் செழித்தோங்க இயற்கையானது பேருதவி செய்கிறது. சங்ககால மக்கள் நிலத்தின் வளத்தினையும்,நீர் நிலைகளையும் பாதுகாத்த தன்மையையும் இந்நூலின் வழி அறிய முடிகிறது. நிலவளத்தை பாதுகாத்த முறைகளுள் வேளாண் தொழில் செயற்பாடுகளான உழுதல் பற்றிய குறிப்புகளும், நெல்லினை விதைத்ததால் உருவாகும் பயிரினை காத்தல் போன்ற செய்திகளையும் உணர முடிகிறது. விளைச்சலின் காரணமாக பல்பொருள் சாகுபடியும், அவற்றிற்கு தேவையான புழங்குபொருட்களையும், அறிவதோடு பண்டமாற்று முறையையும், குறிப்பிடுகிறது. நீரின்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

வளத்தை பாதுகாக்க மழைநீரை நீர்த்துறைகளில் சேமித்த செய்திகளையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியப்படுகிறது.

**குறிப்பு நூல்கள்**

[1] இராமலட்சுமி, தா. இரா. “ஐங்குறுநூற்றில் வேளாண் புழங்கு பொருட்கள்.” *சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்*, ISSN: 2454-3993, மலர்-2, இதழ்-1, ஜூலை-2017.

[2] செயபால். இரா, அகநானூறு மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-6000098, 2007.

[3] சோமசுந்தரனார், பொ.வே. *சிலப்பதிகாரம்.* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, ஜூன்-1968.

[4] தட்சிணாமூர்த்தி, அ. *ஐங்குறுநூறு மூலமும் உரையும்,*புத்தகம்-1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098, 2011.

[5] திருஞானசம்பந்தம், ச. *புறப்பொருள் வெண்பாமாலை.* கதிர் பதிப்பகம், 2017.

[6] நாகராஜன், வி. *குறுந்தொகை மூலமும் உரையும்,* புத்தகம்-1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098. 2011.

[7] நாகராஜன், வி. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்,* புத்தகம்-2. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098, 2013.

[8] பரமேஸ்வரி, பொ. “ஐங்குறுநூற்றில் உரிப்பொருள் மயக்கம்.” *புதியஅவையம்,* ISSN: 2456-821X, மலர்-7, இதழ்-2, ஜூன்-2023.

[9] பாலசுப்ரமணியன் கு. வெ. *புறநானூறு மூலமும் உரையும்,* புத்தகம் -1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 600098, 2007.

[10] பாலசுப்பிரமணியன், கு.வெ. *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 600098, 2011.

[11] வரதராசனார், மு. *திருக்குறள் மூலமும் உரையும்.* தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம் லிமிடெட், சென்னை, 1993.

[12] வைத்தியலிங்கம், செ. *தமிழ்ப் பண்பாட்டு வரலாறு.* ஐந்தாம் பாகம், அண்ணாமலை பல்கலைக்கழக வெளியிடு, சிதம்பரம்-1, 2008.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.